# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC. 474/2025 | Date | : | 11.06.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.2** | Taluk | : | |
| Name | : | **மயில்கணேசன்** | Calling | : | **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** |
| Father / Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.06.2026.

**( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மகுடஞ்சாவடி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.கண்ணன் அவர்கள் பணி மாறுதலில் சென்றதால் அவரது கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.12.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மகுடஞ்சவாடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரும், தலைமை காவலர்கள் திரு.ராஜு மற்றும் திரு.சுரேஷ் என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மகுடஞ்சாவடி

காவல் நிலைய சரகம், இடங்கணசாலை, K.K.நகர், அரசு மேல்நிலைபள்ளி அருகே கண்காணித்துக் கொண்டு சென்றபோது பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த சீனிவாசன் (35) த/பெ. மாதேஸ், K.K.நகர், இடங்கணசாலை, சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் சுமார் 180ML அளவுள்ள கொண்ட 04 Express பிராந்தி பாட்டில்களை உரிய அரசு அனுமதி இன்றி விற்பனை செய்தற்காக போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்துள்ளனர்.

2) விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து காவல் உதவி ஆய்வாளர் 08.15 மணிக்கு கைது செய்தும், மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில் அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த தலைமை காவலர்கள் திரு.ராஜு மற்றும் திரு.சுரேஷ் என்பவரையும் சாட்சிகளாக வைத்து 08.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்தல் மகஜர் தயார் செய்தும் தலைமை காவலர்கள் திரு.ராஜு மற்றும் திரு.சுரேஷ் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் தலைமை காவலர்கள் திரு.ராஜு மற்றும் திரு.சுரேஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள்.

3) பின்னர் 09.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 483/2025 u/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வாக்குமூலங்கள் பதிவு செய்து மேற்படி ஆவணங்களை மாண்புமிகு நீதிமன்றத்திற்கு அனுப்பியும், வழக்கின் புலன் விசாரணையை முடித்து 18.12.2025 தேதியில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வழக்கில் கைப்பற்றப்பட்ட பிராந்தியை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தி, அது பிராந்தி தான் என்று சான்று பெற்றாரா என்றால் இல்லை. சம்பவயிடத்தை குறிப்பிட்டு காட்ட இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை.

2. இவ்வழக்கில், வழக்குச் சொத்து கைப்பற்றிய பின்னர் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் முதல் தகவல் அறிக்கையின் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் எண் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யும் முன்னரே முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டதா, என்றால் இல்லை. எனவே, இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டது என்றும், சம்பவயிடத்திற்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியோ அல்லது காவலர்களோ செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருள் பிராந்தி அல்ல என்று எதிரி கூறுகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிராந்தியை யாருக்கு விற்பனை செய்ய எதிரி வைத்திருந்தார் என்று புலன் விசாரணையில் தெரியவந்ததா என்று சொன்னால் இல்லை. இவ்வழக்கில் பொதுநபர் சாட்சிகளை புலன் விசாரணை அதிகாரி விசாரித்தாரா என்றால் இல்லை. பிராந்தியை அழிக்க இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4. பிடிப்பட்ட பிராந்தியை அழிப்பதற்கு ஆய்வாளர் அல்லது மதுவிலக்கு அதிகாரிக்கு தான் உண்டு என்று சொன்னால் சரிதான். மேற்படி பிராந்தி அழிக்கும் சமயத்தில் அதற்காக தயாரிக்கப்படும் மகஜரில் எவ்வளவு பிராந்தி கைப்பற்றப்பட்டது என்ற விவரமும், அதில் எவ்வளவு ஆய்வு எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும், அதில் எவ்வளவு அழிக்கப்பட்டது என்ற விவரமும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். பிராந்தியை அழித்த பிறகு அதற்குண்டான சான்றை ஆய்வாளரிடமோ அல்லது மதுவிலக்கு அதிகாரியிடமோ பெற வேண்டும் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் மேற்படி பிராந்தியை அழித்தற்கான சான்றை ஆய்வாளரிடமோ அல்லது மதுவிலக்கு அதிகாரியிடமோ பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. பிராந்தியை அழிக்க இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உள்நோக்கம் கொண்டு எதிரி மீது பொய்யாக வழக்கு பதிந்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness -

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

**Sd/- D.Sivakumar**

Judicial Magistrate No.II,
Sankari.